# திருவேற்காடு நகராட்சி

## திருவள்ளூர் மாவட்டம்

# நிர்வாக அறிக்கை

# 2021–22

# திருவேற்காடு நகராட்சி

# நிர்வாக அறிக்கை

# 2021 - 2022

## அமைப்பும் நிர்வாகமும்

### ஆட்சி எல்லை:

சமயக்குறவர் நால்வருள் திருஞானசம்பந்தரால் பாடப் பெற்றதும் அகத்திய மாமுனிவருக்கு பாலம்பிகை சமேத வேதபுரீஸ்வரர் திருமண கோலக்காட்சி அளித்ததும், 63 நாயன்மார்களுள் ஒருவரான மூர்க்கநாயனார் அவதரித்ததும் ஆதிசக்தியே உருமாரி வந்து கருமாரியாய் எழுந்தருளி அருளாட்சி செய்து வரும் அறமோங்கும் திருவேற்காட்டில், திருவேற்காடு, சுந்தரசோழபுரம், வீரராகவபுரம், அயனம்பாக்கம், கோலடி, பெருமாளகரம், நூம்பல் ஆகிய 7 கிராம பஞ்சாயத்துகளை ஒன்றாக சேர்த்து அரசு ஆணை எண்.991/79, நாள்.27.06.1979ன் படி திருவேற்காடு பேரூராட்சி உருவாக்கப்பட்டது. இப்பேரூராட்சி அரசு ஆணை எண். 300, (நகராட்சிகளின் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை), நாள் 24.08.2004ன்படி மூன்றாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. மேலும் இந்நகராட்சி அரசு ஆணை எண்.154, ( நகராட்சிகளின் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 9.08.2010ன் படி தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு 28.50 சதுர கிலோ மீட்டர் பரப்பில் சிறப்புடன் செயல்பட்டு வருகிறது.

### மக்கள் தொகை:

இந்நகராட்சி பகுதியில் அமைந்த 16301 குடியிருப்புகளில் 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி 62824 இதில் 31729 பேர் ஆண்கள், 31045 பேர் பெண்கள் ஆவர். 2022–ம் ஆண்டில் குடியிருப்புகளின் எண்ணிக்கை 22291 ஆகவும் மக்கள் தொகை 89164 ஆகவும் உத்தேசமாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**நகராட்சி அலுவலர்கள்:**

**ஆணையர்:**

அறிக்கையாண்டில் 01.04.2021 முதல் 22.11.2021 வரை திருமதி.மு.ரா.வசந்தி எம்.ஏ., அவர்கள் ஆணையராக பொறுப்பேற்று பணிபுரிந்துள்ளார்.

திரு.H.இரமேஷ்.B,L., அவர்கள் 22.11.2021 பிற்பகல் முதல் 31.03.2022 வரை ஆணையராக பொறுப்பேற்று பணிபுரிந்துள்ளார்.

**பொறியாளர்:**

அறிக்கையாண்டில் 01.04.2021 முதல் 10.10.2021 வரை திருமதி.பி.நளினி அவர்கள் திருவேற்காடு நகராட்சி பொறியாளராக பணிபுரிந்துள்ளார். அறிக்கையாண்டில் 11.10.2021 முதல் 31.03.2022 வரை திரு.A.P.குமார் அவர்கள் திருவேற்காடு நகராட்சி பொறியாளராக பணியாற்றியுள்ளார்.

**தேர்தல்:**

நகர்மன்றத்தின் பதவிக் காலம் 24.10.2016ல் முடிவடைந்ததினை தொடர்ந்து அரசாணை எண்.146, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (தேர்தல்) நாள் 24.10.2016ன்படி நகராட்சி ஆணையரை தனி அலுவலராக நியமித்து உத்திரவிடப்பட்டது. 01.04.2021 முதல் 22.11.2021 பிற்பகல் வரை திருமதி.மு.ரா. வசந்தி எம்.ஏ., அவர்கள் தனி அலுவலர் மற்றும் ஆணையராக பொறுப்பேற்று பணிபுரிந்துள்ளார். 22.11.2021 பிற்பகல் முதல் 31.03.2022 வரை திரு.H.இரமேஷ்.B,L., அவர்கள் தனி அலுவலர் மற்றும் ஆணையராகவும் செயல்பட்டுள்ளார். 2021–2022 அறிக்கையாண்டில் . – சாதாரணக் கூட்டங்களும், அவசரக் கூட்டங்களும் தனி அலுவலரால் நடத்தப்பட்டுள்ளது. 2021–2022 அறிக்கையாண்டில் நகர்புற உள்ளாட்சி தேர்தல் 2022–க்கான அறிவிப்பு அரசிதழ் எண்.69, நாள்.28.01.2022–ன் வாயிலாக வெளியிடப்பட்டது. அரசிதழ் எண்.219 நாள்.20.05.2019 தேதிய இட ஒதுக்கீட்டின்படி வார்டு எண்.5 மற்றும் 18 , SC பொது பிரிவினருக்கும், வார்டு எண்.6 மற்றும் 7 SC பெண்களுக்கும், வார்டு எண்.01,02,10,12,13,14 மற்றும் 16 ஆகிய ஏழு வார்டுகள் பெண்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டவாறு தேர்தல் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இந்நகராட்சியின் 18 வார்டுகளில் 33 ஆண் வாக்குச்சாவடிகளும், 33 பெண் வாக்குச்சாவடிகளும் 11 அனைத்து வாக்காளருக்கான வாக்குசாவடிகளும் ஆக மொத்தம் 77 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டு , 19.02.2022 நகர்புற உள்ளாட்சி தேர்தல் நடத்தப்பட்டது. வாக்குகள்

21.02.2022 அன்று எண்ணப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட 18 வார்டுகளின் உறுப்பினர்களுக்கு சான்றுகள் வழங்கப்பட்டது. 02.03.2022 அன்று பதவிப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டது. புதிய வார்டு உறுப்பினர்கள் கூட்டம் 04.03.2022 அன்று முற்பகல் நடைபெற்று மறைமுக தேர்தல் மூலம் வார்டு எண்.08 உறுப்பினர் திரு.ஏ.கிருஷ்ணமூர்த்தி நகர மன்ற தலைவராகவும், பிற்பகல் நடைப்பெற்ற மறைமுகதேர்தலில் வார்டு எண்.14, உறுப்பினர் திருமதி.ர.ஆனந்தி துணை தலைவராகவும், போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டனர். 31.03.2022 அன்று நடைபெற்ற மறைமுக தேர்தல்கள் மூலம் வார்டு எண்.05 உறுப்பினர் திரு.ப.பிரதானம் வார்டு எண்.06 உறுப்பினர் திருமதி.தெ.விஜயலட்சுமி வார்டு எண்.10 உறுப்பினர் திருமதி.கு.நளினி மற்றும் வார்டு எண்.11 உறுப்பினர் தி.வி.இளங்கோவன் ஆகிய நால்வர் வரி விதிப்பு மேல்முறையீட்டுக்குழு உறுப்பினர்களாகவும், வார்டு எண்.07 உறுப்பினர் திருமதி.ப.ருக்மணி நியமனகுழு உறுப்பினராகவும் வார்டு எண்.15 உறுப்பினர் திரு. செ.சங்கர் ஒப்பந்தக்குழு உறுப்பினராகவும் போட்டியின்றி தேர்ந்தெடுக்ககபட்டு பதவியேற்றுக்கொண்டனர்.

<u>நிர்வாகம்</u>

திருவேற்காடு நகராட்சி புதிய அலுவலக கட்டிடம் கதவு எண்.1 சிவன் கோயில் தெருவில் கட்டி முடிக்கப்பட்டதன் பேரில் 28.09.2020 முதல் புதிய அலுவலக கட்டிடத்தில் நகராட்சி அலுவலகம் செயல்பட்டு வருகிறது.

**2020 –20121 அறிக்கையாண்டில் நகராட்சியில் அனுமதிக்கப்பட்டுள்ள பணியிடங்கள் விவரம்**

| வ. எண். | பணியிடத்தின் பெயர் | பணியிடம் | வ. எண். | பணியிடத்தின் பெயர் | பணியிடம் |
|---|---|---|---|---|---|
| 1. | ஆணையர் | 1 | 12. | பணி மேற்பார்வையாளர் | 1 |
| 2. | மேலாளர் | 1 | 13. | சமுதாய அமைப்பாளர் (அயலிடைப்பணியாக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு திட்டத்திற்கு மாற்றம் செய்யப்பட்டனர்) | 1 |
| 3. | உதவியாளர் | 1 | 14. | பணி ஆய்வர்கள் | 3 |
| 4. | இளநிலை உதவியாளர்கள் | 3 | 15. | மோட்டார் பம்பு இயக்குபவர் | 10 |
| 5. | புள்ளி விவரக் குறிப்பாளர் | 1 | 16. | நகரமைப்பு அலுவலர் | 1 |
| 6. | பதிவறை எழுத்தர் | 1 | 17. | நகரமைப்பு ஆய்வாளர் | 1 |
| 7. | அலுவலக உதவியாளர் | 1 | 18. | துப்புரவு ஆய்வர் | 1 |
| 8. | இரவுக் காவலர் | 1 | 19. | துப்புரவு மேற்பார்வையாளர் | 1 |
| 9. | வருவாய் ஆய்வாளர் | 1 | 20. | துப்புரவு பணியாளர்கள் | 24 |
| 10. | வருவாய் உதவியாளர்கள் | 2 | 21 | பொது சுகாதார பிரிவு ஓட்டுநர் | 3 |
| 11. | நகராட்சி பொறியாளர் | 1 | | | |
| | மொத்தம் | | | | 60 |

## <u>கணினி மயமாக்கல் மற்றும் மின்னனு நிர்வாகம்</u>

இந்நகராட்சியில் சொத்துவரி, தொழில்வரி மற்றும் வரியில்லா இனங்கள் ஆகியவை கணினியில் பதியப்பட்டுள்ளது. மேலும் பிறப்பு இறப்பு பதிவுகளும் கணினியில் பதியப்பட்டு பொதுமக்களுக்கு சான்றுகள் வழங்கப்பட்டு வருகிறது. நகராட்சி அலுவலக வளாகத்தில் வரி வசூல் சேவை மையம் செயல்பட்டு வருகிறது. வரிவிதிப்புகளுக்கான தொகை மற்றும் இதர சேவைக்களுக்கான தொகைகள் பொதுமக்களால் செலுத்தப்பட்டு வருகிறது.

## <u>பொறியியல் பணிகள்</u>

நகராட்சி பொறியியல் பிரிவு மூலம் 2021–22ம் அறிக்கையாண்டில் கீழ்கண்ட திட்டப்பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

| வ.எண். | திட்டத்தின் பெயர் | தொகை (ரூ. இலட்சம்) |
|---|---|---|
| 1. | <u>கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2021–22</u><br>அ) நகராட்நி பகுதியில் நவீன LPG தகன மையம் அமைத்தல் | அரசு நிதி ரூ. 150.00<br>பொது நிதி ரூ. 0.00<br>மொத்தம் ரூ. 150.00 |
| 2. | <u>15வது நிதி குழு ஆணையரகத்தின் மான்ய நிதி 2021–22</u><br>அ) நகராட்சி பகுதிகளில் உள்ள அடிப்படை வசதி பணியான சாலை மற்றும் மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் | அரசு நிதி ரூ. 212.00<br>பொது நிதி ரூ. 6.00<br>மொத்தம் ரூ. 218.00 |
| 3. | <u>15வது நிதி குழு ஆணையரகத்தின் மான்ய நிதி 2021–22 (சிறப்பு)</u><br>அ) நகராட்சி பகுதிகளில் நகர்ப்புற சுகாதார ஆரோக்கிய மையம் அமைத்தல் | அரசு நிதி ரூ. 25.00<br>பொது நிதி ரூ. 0.00<br>மொத்தம் ரூ. 25.00 |

## பொது நிதி பணிகள்

| வ. எண் | பணிகளின் விவரம் | 2021–22 | |
|---|---|---|---|
| | | எடுக்கப் பட்டவை | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
| 1 | தார் சாலைகள் | 35 | 501.50 |
| 2 | சிமெண்ட் சாலைகள் | 1 | 9.50 |
| 3 | குடிநீர் பணிகள் | 7 | 57.20 |
| 4 | தெரு விளக்கு பணிகள் | 2 | 9.80 |
| 5 | மழைநீர் வடிகால்வாய் பணிகள் | 15 | 110.65 |
| 6 | அலுவலக கட்டடம் கட்டும் பணி | 0 | 0 |
| 7 | இதர பணிகள் | 28 | 193.45 |
| | **மொத்தம்** | **88** | **882.10** |

திருவேற்காடு நகராட்சிப் பகுதிகளில், மத்திய/மாநில அரசுகள் நகராட்சி நிர்வாகத் துறை மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களால் அறிவிக்கப்படும் திட்டம் மற்றும் பணிகள் யாவும் மேற்படி அறிக்கையாண்டில் சிறப்பான முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## பொது சுகாதாரம்

இந்நகராட்சியில் நல அலுவலர் பணியிடம் ஏதும் அனுமதிக்கப்படவில்லை. துப்புரவு ஆய்வாளர் சுகாதார பிரிவின், பிரிவு அலுவலராக செயல்பட்டு வருகிறார். ஒரு துப்புரவு பணி மேற்பார்வையாளர், 15 நிரந்தர துப்புரவு பணியாளர் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் 242 தனியார் துப்புரவு பணியாளர்களை கொண்டு பொது சுகாதாரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திருவேற்காடு நகராட்சி பகுதியில் சமுதாய கழிப்பிடங்கள் –10, (இருக்கைகள் –55 ) பொது கழிப்பிடங்கள்–1 (இருக்கைகள்–12) நகராட்சி மூலம் பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது. நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து வீடுகளிலும் தனிநபர் இல்லக் கழிப்பறை மற்றும் தண்ணீர் வசதி உள்ளது. இந்நகராட்சி பகுதியில் தினசரி சேகரிக்கப்படும் குப்பைகள் மொத்த எடை 22.28 மெட்ரிக் டன் ஆக உள்ளது. சேகரிக்கப்படும் குப்பைகள் மக்கும் மற்றும் மக்காத குப்பைகள் என தரம் பிரிக்கப்பட்டு, மக்கும் குப்பைகளில் இயற்கையான முறையில் உரம் தயாரிக்கப்படுகிறது. மக்காத குப்பைகளை தனியார் நிறுவனத்திற்கு மறுசுழற்சிக்கு அனுப்பப்படுகிறது.

பொதுமக்கள் அறியும் வண்ணம் சுகாதாரம் சம்மந்தமான தகவல்கள், தொடர்பு பணிகள் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அறிக்கையாண்டில் பிறப்புகளும், இறப்புகளும் பதிவு செய்யப்பட்டது.

**<u>கொள்ளை நோய் விவரங்கள்</u>**

அறிக்கை ஆண்டில் கொள்ளை நோய் தொடர்பான விவர அறிக்கை

| வ.எண். | நோயின் பெயர் | பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | காலரா | இல்லை |
| 2 | அம்மை | |
| 3 | பிளேக் | |
| 4 | சீதபேதி | |
| 5 | வயிற்றுக் கடுப்பு | |
| 6 | சுவாசப்பை சம்மந்தமான நோய் | |
| 7 | இன்ஃப்ளுன்சா மற்றும் நாய்கடி | |
| 8 | கொரோனா வைரஸ் ( COVID 19) | நகராட்சி பகுதியில் கொரோனா நோய் தொற்று கண்டறிதல், கட்டுப்படுத்துதல், தடுத்தல் உள்ளிட்ட பணிகள் அரசு வழிகாட்டுதலின் படி – கிருமிநாசினிகள் தெளித்தல், விழிப்புணர்வு ஏற்படுத்துதல் ,நோய் எதிர்ப்பு சக்தி மாத்திரைகள் வழங்குதல், நோய்த்தொற்று தொடர்புகள் கண்டறிதல் , Swab Test எடுத்தல், வீடு வீடாக உடல் வெப்பம் பரிசோதித்தல், பொது மக்களுக்கு இலவச கபசூர குடிநீர் வழங்குதல் உள்ளிட்ட அனைத்து பணிகளும் நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்து பொது சுகாதாரம் பேணப்பட்டது. நடப்பு நிதியாண்டில் மாநில பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து ரூ.5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு மேற்படி நிதி முறையாக செலவிடப்பட்டுள்ளது. |

**<u>துப்புரவு பணிகள்</u>**

பொது சுகாதாரப் பிரிவு துப்புரவு பணியாளர்களால் நகரில் உள்ள குப்பைகள் தினசரி அகற்றப்பட்டு துப்புரவு செய்யப்பட்டது. இந்நகராட்சிப் பகுதியில், நகராட்சிக்கு சொந்தமான கட்டண கழிப்பறையில் நகராட்சி துப்புரவு பணியாளர்களை கொண்டு கட்டணம் வசூலிக்கப்படுகிறது. மேலும்

நகராட்சி மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. அறிக்கையாண்டில் 1 டிப்பர் லாரி 11 சிறிய இலகு ரக வாகனங்கள் மற்றும் 33 பேட்டரி வாகனங்கள் துப்புரவு பணிக்காக பயன்படுத்தப்பட்டது. வார்டு எண்.1 முதல் 18 வரை உள்ள வார்டுகளை தனியார் மூலமும் மற்றும் நகராட்சி துப்புரவு பணியாளர்களை கொண்டும் துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டது. திருவேற்காடு நகராட்சியில் வீடு வீடாகச் சென்று சேகரிக்கப்படும் மக்கும் குப்பைகள், 7 பசுமை உரக்குடில்கள் (Micro compost Centre), 10 பூங்கா உரக்குடில்கள் அமைக்கப்பட்டு அங்கு, இயற்கை முறையில் உரம் தயாரிக்கப்பட்டு வருகிறது. மக்காத குப்பைகள் தனியார் நிறுவனத்திடம் மறுசுழற்சிக்கு அனுப்பப்படுகிறது.

**உணவு கலப்பட தடுப்பு சட்டம்**

2021–2022ம் ஆண்டு, உணவு பாதுகாப்பு சட்டம் அமுலில் உள்ளதால் மேற்படி பணிகள், உணவு பாதுகாப்பு துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது,

**வருவாய் பிரிவு வருவாயினம்**

2021–2022 நிதியாண்டில், சொத்துவரி, காலிமனை வரி, தொழில்வரி மற்றும் வரியில்லா இனங்கள் வசூலிக்கப்பட்ட விவரம் கீழ்கண்டுள்ளவாறு உள்ளது.

**சொத்து வரி:**

| கேட்பு தொகை | வசூல் | நிலுவை |
|---|---|---|
| 1205.91 | 843.57 | 362.34 |

சொத்து வரி விதிப்புகள் 2020 – 21-ல் 23995 வரி விதிப்புகள் இருந்தன. தற்போது 2021–2022ல் 25995 என வதி விதிப்புகள் விதிக்கப்பட்டு கேட்பு உயர்வு செய்யப்பட்டுள்ளது.

**காலிமனை வரி:**

| கேட்பு தொகை | வசூல் | நிலுவை |
|---|---|---|
| 222.29 | 94.58 | 127.71 |

காலிமனை வரி விதிப்புகள் 2020 – 21-ல் 4109 வரி விதிப்புகள் இருந்தன. தற்போது 2021–2022ல் 4827 என வரி விதிப்புகள் விதிக்கப்பட்டு கேட்பு உயர்வு செய்யப்பட்டுள்ளது.

**தொழில் வரி:**

| கேட்பு தொகை | வசூல் | நிலுவை |
|---|---|---|
| 258.46 | 223.62 | 34.85 |

தொழில் வரி விதிப்புகள் 2020 – 21-ல் 971 வரி விதிப்புகள் இருந்தன. தற்போது 2021–2022ல் 748 என வரி விதிப்புகள் விதிக்கப்பட்டு கேட்பு உயர்வு செய்யப்பட்டுள்ளது.

**வரியில்லா இனங்கள்:**

இந்நகராட்சிக்கு வரியில்லா இனங்களில் இரண்டு ஆண்டு குத்தகை இனங்கள் மட்டுமே உள்ளது. நகராட்சிக்கு சொந்தமான வணிக உபயோக கடைகள் ஏதும் இல்லை. ஆண்டு குத்தகை இனங்களான வாகன நுழைவு கட்டணங்கள் வசூலிக்கும் குத்தகை உரிமம் 2 குளியலறையுடன் கூடிய கட்டண கழிப்பிடம் ஆகிய இரண்டு குத்தகை இனங்கள் மட்டுமே உள்ளது. மேற்கண்ட இரண்டு குத்தகை இனங்களில் வாகன நுழைவு கட்டணம் குறித்த குத்தகை உரிமம் வழங்கும் நடவடிக்கைகளுக்கு சென்னை உயர் நீதி மன்றத்தில் இடைக்காலத்தடை விதிக்கப்பட்ட வழக்கு WP.No.5592/2020ன் மீதான இடைக்கால தடை மட்டும் விலக்கி கொள்ளப்பட்டு விசாரணை 04.06.2021க்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. நகராட்சிக்கு சொந்தமான கழிவறை துறை மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**<u>நகரமைப்பு</u>**

இந்நகராட்சியில் ஒரு நகரமைப்பு அலுவலர் பணியிடம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. ஒரு நகரமைப்பு ஆய்வர் பணியிடம் உள்ளது. நகர்மன்ற தீர்மானம் எண்.36 நாள் 26.06.2016ன் படி 01.08.2016 முதல் கட்டிட உரிமையாணை கட்டணம் உயர்த்தி வசூலிக்கப்பட்டு வருகிறது. இந்நகராட்சி பகுதியில் கட்டப்படும் கட்டுமானங்கள் முறையாக கட்டிட அங்கீகாரம் பெறப்பட்டு கட்டப்பட்டு வருகின்றன. கட்டிட அனுமதி பெறாமல் கட்டப்படும் கட்டுமானங்கள் உடனுக்குடன் கண்டறியப்பட்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920–ன்கீழ் அறிவிப்பு வழங்கப்பட்டு அங்கீகாரம் பெற ஆவன செய்யப்படுகிறது. அங்கீகாரம் பெறாமல் கட்டிடம் கட்டுபவர்கள் மீது சட்ட ரீதியாக நிர்வாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. அறிக்கையாண்டில் 236 எண்ணிக்கை கட்டிட விண்ணப்பங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் இவ்வறிக்கையாண்டில் வரன்முறைபடுத்து திட்டத்தின் கீழ் 254 கட்டிட மனை விண்ணப்பம் பெறப்பட்டு வரன்முறைப்படுத்தப்பட்டுள்ளது.

**<u>தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார திட்டம் (NULM)</u>**

இந்நகராட்சிக்கு அனுமதிக்கப்பட்ட சமுதாய அமைப்பாளர் பணியிடம் ஒன்று, மேற்படிபணியாளரை அயலிடைப் பணியாக NULM திட்டப் பணிகளை கவனிக்க தமிழ் நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டத்திற்கு மாறுதல் செய்யப்பட்டுள்ளது. திருவேற்காடு நகராட்சியில் சுவர்ண ஜெயந்தி

திட்டம் முடிவடைந்து புதிய திட்டமாக தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதாரத் திட்டம் (Tamil Nadu Urban Livability Mission) அறிக்கையாண்டில் செயலாக்கத்திற்கு நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டம் செயல்படுவதற்கு வறுமைக் கோடு பட்டியல் கூராய்வு செய்து சரிபார்க்கப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தினை மேன்மைப்படுத்தும் பொருட்டு USHA Slum Survey – குடிசைப் பகுதி மக்களின் வாழ்வாதாரம் பற்றிய கணக்கெடுப்பு எடுக்கப்பட்டுள்ளது. இக்கணக்கெடுப்பில் பெண்களை குடும்பத் தலைவராக கொண்ட குடும்பங்களை கண்டறியப்பட்டது. (விதவைகள், கணவரால் கைவிடப்பட்டவர்கள், திருமணம் ஆகாத பெண்கள், விவாகரத்தானவர்கள், நோய் மற்றும் உடல் ஊனத்தால் பாதிக்கப்பட்ட ஆண்களின் வருமானம் ஈட்டம் முடியாத குடும்பத்தில் உள்ள பெண்கள்) மேற்படி பயனாளிகளுக்கு அரசின் பல்வேறு திட்டம் மூலம் பயன் அடையும் பொருட்டு இக்கணக்கெடுப்பு எடுக்கப்பட்டுள்ளது.

புதியதாக துவங்கப்பட்டுள்ள தமிழ்நாடு வாழ்வாதார திட்டம் (TNLUM) –த்தில் கீழ்க்காணும் வகைப்பாடுகள் மூலம் செயல்பட்டு வருகிறது.

1) சமுதாய மேம்பாட்டுத் திட்டம் (Social Mobilization & Institution Development)
2) திறன் வளர் பயிற்சி (Capacity Building)
3) திறன் மேம்பாட்டு பயிற்சி மூலம் வேலைவாய்ப்பு (Employment through Skilled and Training)
4) தனிநபர் தொழிற் வளர்ச்சி திட்டம் (Self Employment Programme)
5) வீடற்ற மக்களுக்கு உணவிடம் (Shelter for Urban Homeless) (இந்நகராட்சியில் இத்திட்டம் இல்லை)
6) சாலையோர வியாபாரிகளுக்கு வளர்ச்சித் திட்டம் (Support to Urban Street Vendors)

    இவ்வகைப்பாடுகள் மூலம் இத்திட்டம் நகர்ப்புறத்தில் உள்ள மக்களின் வாழ்க்கைதரம் மேம்படுத்திட , சாலையோர வியாபாரிகள் பற்றிய கணக்கெடுப்பு முடிக்கப்பட்டது. பயனாளிகளுக்கு இந் நகராட்சியின் நகரமைப்பு பிரிவின் மூலம் அடையாள அட்டை வழங்கப்பட்டது.

7) மக்களை தேடி மருத்துவம்

    மக்களை தேடி மருத்துவம் என்ற திட்டம் தன்னார்வலர்கள் மூலம் (CRP) மூலமாக இத்திட்டம் சுகாதாரத் துறையின் மூலமாக செயல்ப்படுத்தப்பட்டு வருகிறது.

ஆணையர்
திருவேற்காடு நகராட்சி.